www.newwisdomministries.com

கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி



இணைய வார இதழ்

ஞானம் 5 - ஒலி 34 | 21-08-2022



# ஒன்று மற்றொன்றைத் தொடரும்



## தலையங்கம்

# விருப்பமே வழிநடத்தும்

அருட்பணி. **சைமன் பீட்டர்**

இயேசு கிறிஸ்துவுக்குள் பிரியமான எனதருமை சகோதரர்களே, சகோதரிகளே வணக்கம்.

இறையருளால் நாங்கள் அனைவரும் நலமோடு இருப்பதுபோல் நீங்கள் அனைவரும் எல்லா வளமும், நலமும் பெற்று வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

ஒரு மனிதரின் சொல்லும், செயலும் மிகவும் பண்பட்டதாகவும், மனிதமும் தெய்வீகமும் கலந்த முழு அன்பாகவும் இருந்தால் அவரே இறைவனின் மறுவுருவாக மதிக்கப்படுவார்கள்.

ஒருமுறை ஒரு மனிதர், தனது முன்னாள் பள்ளி ஆசிரியரைப் பார்க்கச் சென்றார், தன்னை யார் என்று தெரிகிறதா? என்று அவரிடம் கேட்டார். அதற்கு அந்த ஆசிரியர், நீங்கள் யாரென்று சரியாக அடையாளம் காணமுடியவில்லை, தயவு செய்து நீங்களே உங்களைப் பற்றி எனக்குச் சொல்லுங்கள் என்று கூறினார்.

அதற்கு அவர், ஐயா, நான் உங்கள் மாணவன், மாணிக்கம். இப்போது நான் ஒரு கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றேன். நான் பள்ளியில் படிக்கின்றபோது ஒருநாள் உங்களைப் போல் நானும் ஓர் ஆசிரியராகத்தான் வரவேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதேபோல இன்று நான் ஒரு கல்லூரியில் பேராசிரியராகப் பணி செய்கிறேன். அதற்குக் காரணம் நீங்கள்தான் ஐயா. உங்களின் பண்பும், மாணவர்களாகிய எங்களை நீங்கள் நடத்தியவிதமும், உங்களின் நடத்தையும்தான் எனக்குள் அப்படிப்பட்ட இலட்சியத்தை உருவாக்கியது. அதற்கு அந்த ஆசிரியர், மிகவும் நல்லது தம்பி. எனக்கு மிக்க மகிழ்ச்சியாய் இருக்கின்றது. உங்களுக்குள் அத்தகைய ஆர்வத்தைத் தூண்டும் விதத்தில் நான் என்ன பெரிதாக செய்விட்டேன். மாணவர்களுக்கு நான் நன்கு பாடம் கற்பித்தேன். அதைத்தவிர வேறு எதையும் நான் செய்ததாக எனக்கு நினைவில்லை என்றார்.

அதற்கு அந்த முன்னாள் மாணவர், ஐயா, நான் எட்டாம் வகுப்பு படிக்கும் சமயத்தில், நீங்கள்தான் எங்கள் வகுப்பு ஆசிரியர். எனக்கு அருகில் உட்கார்ந்திருந்தவன், சற்று வசதியானவன். அவன் தினமும் ஒரு விலையுயர்ந்த கைக் கடிகாரத்தை கட்டிக்கொண்டு வருவான். நானும் அதேபோன்ற கடிகாரத்தைக் கட்டிக் கொண்டு பள்ளிக்கு வரவேண்டும் என்று தீராத ஆசை, ஆனால் எனது தந்தை ஓர் ஏழைக் கூலித் தொழிலாளி. அவரால் எனக்கு அந்த விலையுயர்ந்தக் கடிகாரத்தை வாங்கித் தர இயலாது. ஆகவே நான் அந்தக் கடிகாரத்தை அவனிடமிருந்து திருடிக் கொள்ள வேண்டும் என்று திட்டம் தீட்டினேன். அதற்காக சரியான நேரத்தை எதிர்பார்த்திருந்தேன்.

ஒருநாள் நாங்கள் அனைவரும் விளையாட்டு வகுப்புக்காக வெளியில் விளையாடச் சென்றோம். நாங்கள் அனைவரும் எங்களின் சட்டைகளையெல்லாம் களற்றி வகுப்பிலேயே வைத்துவிட்டு வெளியே சென்றோம். அவன் தனது கடிகாரத்தைக் கழற்றி அவனின் சட்டைப் பையில்

வைத்துவிட்டுப் போனான். அப்போது நான் அந்த கடிகாரத்தை எடுத்து என் கால் சட்டைப் பையில் ஒளித்து வைத்துக் கொண்டேன்.

அனைவரும் விளையாடிவிட்டு வகுப்புக்குள் வந்தவுடன், அவன் தனது கடிகாரத்தைக் காணவில்லை என்று உங்களிடம் முறையிட்டான். அப்போது நீங்கள் யாராவது இவனின் கடிகாரத்தை எடுத்திருந்தால், உடனே அதை அவனிடம் திருப்பித் தந்துவிடுங்கள் என்றீர்கள். ஆனால், அச்சமயத்தில் அதை திரும்பித் தர எனக்கு மனமில்லை.

நீங்கள் மாணவர்கள் அனைவரையும் வரிசையாக நிற்க வைத்தீர்கள். அனைவரும் கண்களை மூடிக்கொள்ளுங்கள். நான் சொல்லும்வரை யாரும் கண்களைத் திறக்கக்கூடாது என்று சொல்லிவிட்டு, மாணவர்களின் பாக்கெட்டுகளில் உங்கள் கைகளை விட்டுத் தேடினீர்கள். என்னுடைய கால் சட்டைப் பைகளில் கைகளை விட்டுப் பார்த்து அங்கிருந்த அந்த கடிகாரத்தை எடுத்துச் சென்று உங்கள் மேசையில் வைத்துவிட்டு, அனைவரையும் கண்களைத் திறக்கச் சொல்லி, அவரவர் இடங்களில் அமரச் சொன்னீர்கள். அந்த மாணவனை அழைத்து அவனிடம் அந்தக் கடிகாரத்தை கொடுத்துவிட்டு, பாடத்தை நடத்த ஆரம்பித்தீர்கள்.

என்னைப்பற்றி அந்த மாணவனிடமும், மற்ற மாணவரிடமும் எதுவும் கூறவில்லை. எல்லா மாணவர்களும் கண்களை மூடி இருந்ததால் யாருக்கும் எனது தவறு தெரியவில்லை. அதே சமயம், என்னையும் கூப்பிட்டு எதையும் கூறவில்லை. ஏன் இந்தத் தவறைச் செய்தாய் என்று இதுவரை நீங்கள் கேட்கவில்லை. எனக்கு எந்தத் தண்டனையையும் தரவில்லை.

உங்களின் அந்தப் பெரிந்தன்மையைக் கண்டு மிகவும் பிரமித்துப் போனேன். அதுதான் ஓர் உன்னதமான ஆசிரியரின் சிறப்பு என்பதை அன்று உணர்ந்தேன். அப்படிப்பட்ட உங்களைப்போலவே நானும் ஆசிரியராக வேண்டும் என்று அன்று முடிவெடுத்தேன். இன்று உங்கள் முன் ஓர் ஆசிரியராக நிற்கிறேன்.

ஐயா, இப்போதாவது நான் யார் என்று நினைவிருக்கிறதா? என்று கேட்டார். அதற்கு அந்த ஆசிரியர், எனக்கு எதுவும் நினைவில்லை தம்பி. அதற்கு அந்த மாணவர், ஐயா, அந்தக் கடிகாரத்தை எடுத்தது நான்தான் என்பதாவது நினைவிருக்கிறதா? என்று கேட்டார். அதற்கு அந்த ஆசிரியர், அந்தக் கடிகாரம் யாருடைய பையில் இருந்தது என்று எனக்கு இன்றுவரை தெரியவில்லை, ஏனென்றால், நானும் அப்போது என் கண்களை மூடி வைத்திருந்தேன் என்றாராம்.

அப்போது அந்த மாணவருக்கு தனது ஆசிரியரைப் பற்றிய பிரமிப்பு இன்னும் அதிகமானது. அவரின் கால் பாதங்களைத் தொட்டு வணங்கிவிட்டு தன் வீட்டிற்குத் திரும்பிச் சென்றார்.

நமது கத்தோலிக்கத் திருஅவையில் எந்த மதத்திலும் இல்லாத ஓர் அறுமையான சிறப்பம்சம் ஒன்று உண்டு அது என்னவென்றால் அது ஒப்புரவு அருட்சாதனம்தான். அதைவிட சிறப்பு என்னவென்றால், ஒப்புரவு அருட்சாதனம் வழங்கும் எந்தக் குருவும் யாருடைய பாவ அறிக்கையையும் யாரிடமும் இதுவரை கூறியதில்லை. அவ்வாறு அந்த ஒப்புரவு அருட்சாதன இரகசிய முத்திரையை எந்தக் குருவும் இதுவரை முறித்ததில்லை.

ஒருவர் மிகவும் கெட்டவராக வாழ்ந்து வந்தார். இப்படி அடாவடியாக யாரையும் மதிக்காமல், குறுக்கு வழியில் சம்பாதித்தால்தான் பிழைக்க முடியும் என்று வாழ்ந்தார். அதனால், அவரின் வசதிகள் பெருகியது. பல காலத்திற்குப் பின் அப்படி வாழ்வதில் எந்த ஒரு நன்மையும் இல்லை, குற்ற உணர்வே மிஞ்சியது, அது அவமானகரமானது என்பதை உணர்நது, திருந்தி வாழ்ந்தார். ஒருமுறை தனியாக அமர்ந்து இயேசுவிடம் தனது தவறுகளுக்காக வருந்தி, தன்னை மன்னிக்க வேண்டும் என்று மன்றாடினார்.

அப்போது இயேசு அவர்முன் தோன்றி, நீ அப்படி என்ன பெரிய தவறுசெய்தாய். எனக்கு நினைவில்லையே என்றாராம். அதற்கு அவர், என்னங்க இப்படிச் சொல்லிட்டீங்க. நீங்கள் கடவுள், உங்களுக்குத் தெரியாதா? நான் எவ்வளவு பெரிய பாவி என்று. நான் செய்யாத தவறே இல்லை எனறாராம்.

அதற்கு இயேசு, அதுபற்றி எனக்கு எதுவும் தெரியவில்லை. எப்போது உன் தவறுகளை நினைத்து அழுதாயோ, மன்னிப்புக் கேட்டாயோ அப்போதே எனக்கு எல்லாம் மறந்துவிட்டது என்றாராம்.

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்று ஒரு புலவரை எழுத வைத்தவரே அந்தக் கடவுள்தானே.

ஆனால், நாம் அந்தக் கடவுளைவிடவும் பெரியவர்கள் அல்லவா. நாம் எதையும் எப்போதும் மறக்க மாட்டோம். ஏனென்றால், நாம் ரொம்ப ரோஷக்காரர்கள். அதுதான் நமக்கு பெருமை, நமது அடையாளம். நானா? கொக்கா?



# விவிலியம் அறிவோம் – 52



அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## விடுதலைப் பயணம் நூல் ஒரு பார்வை

நண்பர்களே! இந்தவாரம் முதல் விவிலியத்தின் இரண்டாவது நூலான விடுதலைப் பயணம் பற்றி சிந்திக்க இருக்கின்றோம். ஐந்நூல்களில் இரண்டாவது நூலாக விடுதலைப் பயணம் நூல் உள்ளது. எபிரேய மொழியில் இந்நூல் *We Ellehshemoth* (பெயர்கள் இவை) அல்லது Shemoth (பெயர்கள்) எனஅழைக்கப்படுகிறது. தமிழ் விவிலியத்தில் வருகின்ற விடுதலைப் பயணம் என்ற சொற்றொடர் கிரேக்க விவிலியத்தில் காணப்படும் Exodos என்ற சொல்லிலிருந்து வருகிறது.

Exodos என்ற கிரேக்கச் சொல்லிற்கு, வெளியே, வெளியேறுதல் என்ற பொருள்கள் உண்டு. எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்துகொண்டிருந்த இஸ்ரயேல் மக்களை தனது ஆற்றலாலும் வல்லமையாலும் கடவுள் விடுதலை செய்து வாக்களிக்கப்பட்ட நாட்டைநோக்கி நடத்திச் செல்வதை இந்நூல் குறிப்பிடுகிறது. இந்நூலின் மையக் கருத்துக்களாக அடிமைத்தனம், விடுதலை, சீனாய் மலையை நோக்கிய பயணம், உடன்படிக்கை, திருச்சட்டங்கள், வழிபாடு போன்றவை உள்ளன.

கடவுளின் பேரிரக்கமும் அருளும் விடுதலைப் பயண நிகழ்வுகளில் வெளிப்படுகின்றன. கடவுளின் பேரிரக்கத்திற்கும் அருளுக்கும் இஸ்ரயேல் மக்கள் எவ்வாறு பதிலளிக்கவேண்டும் என்பது பத்துக்கட்டளைகளிலும் ஏனைய உடன்படிக்கை விதிகளிலும் கொடுக்கப்படுகின்றன. பாஸ்கா விழா ஒவ்வொரு வருடமும் விடுதலையின் நினைவாகக் கொண்டாடப்பட வேண்டும் என்பது மக்கள் இந்த விடுதலை நிகழ்வுகளையும் தங்கள் கடமைகளையும் மறந்து விடக்கூடாது என்பதற்காக கொடுக்கப்பட்டுள்ளது. மோசே, ஆரோன், மிரியம் போன்றோர் மக்கள் தலைவர்களாகவும், விடுதலைப் போராட்டத்திற்கும் இறை நம்பிக்கைக்கும் எடுத்துக்காட்டுகளாகவும் வருகின்றனர். விடுதலைப் பயணம் நூல் ஒடுக்கப்பட்டவர்களுக்கு விடுதலையளிக்கும் கடவுளை நமக்குக் காட்டுகிறது.



விடுவிக்கப்பட்ட மக்களை அடிமைத்தன நாட்டிலிருந்து வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு கடவுள் கூட்டிவருகிறார்.

விடுதலைப் பயணம் நூல் இஸ்ரயேல் மக்களின் எண்ண அலைகளை, எதிரெதிர் உணர்வுகளை பதிவு செய்கிறது. விடுதலை இஸ்ரயேல் மக்களுக்கு ஆனந்தத்தையும் அக்களிப்பையும் கொடுக்கிறது. அதை அவர்கள் கொண்டாடுகின்றனர். ஆனால் அந்த அக்களிப்பின் ஓசை மறையுமுன்னே முணுமுணுப்பையும் கேட்கிறோம். உடன்படிக்கை அவர்களை கடவுளின் மக்களாக்கியது. ஆண்டவர் கூறிய அனைத்தையும் நாங்கள் செயல்படுத்திக் கீழ்ப்படிந்திருப்போம் (விப 24:7; 19:8) என்று அவர்களைக் கூறவைத்தது. ஆனால் மிக விரைவிலேயே கடவுளுக்கு எதிராகவும் கடவுளின் பிரதிநிதியாக அவர்களை வழிநடத்திய மோசேக்கு எதிராகவும் எழும்புகிறார்கள். கீழ்ப்படியாமல் போகிறார்கள். மோசே நாற்பது நாட்கள் சீனாய் மலையில் இருந்தபோது யாவே கடவுளின் பிரசன்னத்தை அவர்களால் நம்பமுடியவில்லை. தங்களை வழிநடத்த கடவுள் வேண்டும் என்று ஆரோனைக் கேட்கின்றனர். தங்களுக்கென்று பொற்கன்றுக் குட்டியைச் செய்து வழிபடத் தொடங்குகின்றனர். பாலைவனத்தில் பசியால் வாடியபோது வானக உணவாக மன்னாவைத் தருகின்றார் கடவுள். ஆரம்பத்தில் அகமகிழ்ந்த மக்கள் நாட்கள்

செல்லச் செல்ல எப்போதும் இந்த உணவையே உண்ணவேண்டும் என சலித்துக் கொள்கின்றனர். யஸவே கடவுளைக் காணவேண்டும் என்று ஆர்வம் காட்டிய மக்கள் அவர்களுக்குத் தன்னை வெளிப்படுத்தியபோது அச்சப்பட்டு தங்களோடு பேசவேண்டாம் என்கின்றனர்.

விடுதலைப் பயணம் நூல் யஸவே மரபு,ஏலோகீம் மரபு, இணைச்சட்ட மரபு, குருக்கள் மரபு ஆகிய நான்கு மரபுகளிலிருந்து வரும் பாடங்களையும் உள்ளடக்கியது. இந்நூலின் அடிப்படைக் கட்டமைப்பு யாவே மரபிலிருந்து வருகிறது. ஏனைய மரபைச் சார்ந்த ஆசிரியர்கள் யஸவே மரபிலிருந்துவரும் பாடங்களோடு சிலவற்றைச் சேர்த்தும், திருத்தியும் எழுதியுள்ளனர். யாவேமரபு ஆசிரியரைப் பொறுத்தவரை கடவுள் குலமுதுவரான ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குறுதிகள் (தொநூ 12:2-7) எவ்வாறு நிறைவேறுகின்றன என்பதைக் கூறுவதுதான் நோக்கம். அதாவது ஆபிரகாமின் வழிவந்தவர்களை ஒருபெரிய இனமாக்கி கானான் நாட்டைஅவர்களுக்குத் தருவதாக கடவுள் வாக்களித்திருந்தார். எகிப்தில் வாழ்ந்த காலத்தில் இஸ்ரயேல் மக்கள் ஏற்கனவே ஒருபெரிய இனமாக மாறிவிட்டார்கள். கடவுளின் வாக்குறுதியில் ஒருபகுதி அங்கே நிறைவேறிவிட்டது.இனி அவர்கள் தங்களுக்கென்று கடவுள் வாக்களித்த நாட்டைப் பெறவேண்டும். யாவே கடவுள் அவர்கள் வாழ்வில் ஈடுபட்டு அவர்களுக்கு தான் வாக்களித்த நாட்டைக் கொடுக்க விழைகின்றார். அதை எவ்வாறு செயல்படுத்துகின்றார்? (விப 3:8, 17; 34:11), வாக்களிக்கப்பட்ட நாட்டைப் பெறுவதற்கு இஸ்ரயேல் என்ன செய்யவேண்டும்? என்பதற்கெல்லாம் யாவே மரபு ஆசிரியர் முக்கியத்துவம் தருகின்றார்.

ஏலோகீம் மரபைச் சார்ந்தஆசரியர் யாவே மரபிலிருந்து வரும் கருத்துக்களோடிணைந்து தனது கருத்துக்களைக் கூறுகிறார். இப்போதைய பாடத்தில் யாவே மரபிலிருந்து வரும் பகுதிகளையும் ஏலோகீம் மரபிலிருந்து வரும் பகுதிகளையும் பிரிப்பது கடினம். அவை இரண்டும் ஒன்றாக இரண்டறக் கலந்துவிட்டன. ஏலோகீம் மரபிலிருந்து வரும் பகுதிகளைக் பிரித்துப் பார்ப்பது கடினம் என்றாலும் அந்த மரபிலிருந்து வரும் மையக் கருத்துக்களை எளிதில் இனங்கண்டு கொள்ளலாம். ஏலோகீம் மரபு மறு உலகை நோக்கிய பாவைகொண்டது. இந்த மரபில் சீனாய் மலை உடன்படிக்கை முக்கியத்துவம் பெறுகிறது. சுருக்கமாகக் கூறினால் விடுதலைப் பயணத்தின் நோக்கமே சீனாய் உடன்படிக்கைதான் (விப 3:12). உடன்படிக்கையால் இஸ்ரயேல் மக்கள் ஒரு குருத்துவத் திருக்கூட்டமாக மாறுகின்றனர் (விப 19:6) விடுதலைப் பயணம் நூலில் இணைச்சட்ட மரபு ஆசிரியரின் பங்கு குறைவானதுதான். ஆனால் அவரது கைவண்ணமும் ஆங்காங்கேத் தெரிகின்றன. குறிப்பாக இஸ்ரயேல் மக்களின் எகிப்திய அடிமை வாழ்வு,விடுதலைக்கான கடவுளின் தலையீடு, மோசேயின் வழிநடத்துதலில் நடக்கும் விடுதலைப் பயணம்,பாலைவன வாழ்வு,சீனாய் உடன்படிக்கை மற்றும் பத்து கட்டளைகள் போன்ற மையக்கருத்துக்களில் இணைச்சட்டமரபு ஆசிரியரின் இணைப்புகள் தெரிகின்றன.

குருக்கள் மரபு ஆசிரியர் யாவே மரபு மற்றும் ஏலோகீம் மரபிலிருந்து வரும் பாடங்களை திருத்தி அவருடைய கருத்துக்களை இணைக்கிறார். இன்று நமது கைகளில் தவளும் விடுதலைப் பயணம் நூல் குருக்கள் மரபு ஆசிரியரால் தொகுக்கப்பட்டு பதிப்பிக்கப்பட்டதுதான். அவரது நோக்கமெல்லாம் எருசலேமையும் எருசலேம் ஆலயத்தில் நடக்கும் வழிபாட்டையும் மையமாகக் கொண்டது. அவரைப் பொறுத்தவரை எருசலேம் ஆலயத்தில் நிகழும் வழிபாடுகள் அனைத்தும் சீனாய் உடன்படிக்கையின் விளைபயன்; கடவுள் மோசே வழியாக அளித்த சட்டங்களினால் உருவானவை. எனவே உடன்படிக்கை, வழிபாடு மற்றும் திருச்சட்டங்கள் ஆகியவற்றில் பிற்காலத்தில் எழுந்த மரபுகளையும் பழக்கவழக்கங்களையும் இணைத்து எழுதுகிறார். உதாரணமாக யாவே மற்றும் ஏலோகீம் மரபுகளிலிருந்துவரும் பாஸ்கா விழாவைப் பற்றிய பாடங்களை (12:21-23, 27ஆ, 29-39) விரிவுபடுத்தி எருசலேம் ஆலயம் கட்டப்பட்ட பிறகு கொண்டாடப்பட்ட பாஸ்கா விழாவைப் (12:1-20, 28, 40-50) பின்னணியாகக் கொண்டு மாற்றியமைக்கிறார். குருக்கள் மரபு ஆசிரியரைப் பொறுத்தவரை கடவுள் இஸ்ரயேல் மக்களோடு சீனாய் மலையில் செய்த உடன்படிக்கை மூன்றாவது உடன்படிக்கை. முதல் உடன்படிக்கை வெள்ளப் பெருக்கிற்குப் பிறகு நோவாவுடன் செய்த உடன்படிக்கை (தொநூ 9). இரண்டாவது உடன்படிக்கை ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கை (தொநூ 17). சீனாய் உடன்படிக்கை மூன்றாவது உடன்படிக்கை. அபிரகாமோடு செய்த உடன்படிக்கை வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக கடவுள் தனது பெயரையும்



ஆற்றலையும் வெளிப்படுத்துகிறார் (விப 6:2-4,7; 7:5). சீனாய் மலையில் இஸ்ரயேல் மக்களோடு செய்த உடன்படிக்கை ஆபிரகாமுக்கு அளித்த வாக்குறுதினை நிறைவேற்றுவதற்காகவே. சீனாய் மலையில் பிரகடனப்படுத்தப்பட்ட திருச்சட்டங்களை வாழ்வதன் வழியாக இஸ்ரயேல் மக்கள் உடன்படிக்கையின் பலன்களை அனுபவிக்கமுடியும்.

விடுதலைப் பயணம் நூல் மோசேயின் சிறப்புகளையும் வெளிப்படுத்துகிறது. மோசே எகிப்தில் பிறந்து வளர்ந்தவர். காலச்சூழலில் எகிப்திலிருந்தது வெளியேறினாலும் பின்னர் எகிப்திற்குச் சென்று அடிமைத்தனத்தில் வாழ்ந்த இஸ்ரயேல் மக்களை ஒன்றிணைத்து, பார்வோனின் பிடியிலிருந்து அவகளை விடுவித்து வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு நடத்திச் சென்றவர். எனவே எகிப்தில் வாழ்ந்த இஸ்ரயேலின் மூதாதையர்களுக்கும் எகிப்திலிருந்து வெளியேறி ஒரு மக்களினமாக உருவெடுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் அவரே பாலமாக விளங்குகின்றார். விடுதலைப் பயணத்தின் போதுதான் இஸ்ரயேல் என்ற மக்களினம் பிறக்கிறது. இஸ்ரயேல் மக்களை ஒரு மக்களினமாக உருவாக்கிய சிற்பிதான் மோசே. மோசேயின் அழைத்தல், பணிவாழ்வு, இஸ்ரயேல் மக்களை விடுவிக்க தயாரிப்பு, இறையனுபவம் அனைத்துமே இந்த மக்களை ஒரு மக்களினமாக மாறச்செய்வதில்தான் அடங்கியுள்ளது. எனவே அவரை இஸ்ரயேலின் தேசத்தந்தை என அழைக்கலாம். விடுதலைப் பயண நிகழ்வுகளில்தான் இஸ்ரயேல் மக்கள் முதல் முதலாக யாவே கடவுளை அறிகின்றனர்; அனுபவிக்கின்றனர்; அவரது பேரிரக்கத்தை, வழிநடத்துதலை உணர்கின்றனர். கடவுள் அவர்களோடு உடன்படிக்கை செய்து கொள்கிறார். அவரை எவ்வாறு வழிபடவேண்டும் என்பதைக் காண்பிக்கிறார். திருச்சட்டங்களும் இங்கேதான் பிறப்பெடுக்கின்றன. யாவே கடவுள் மீது இஸ்ரயேல் மக்கள் கொள்ளும் நம்பிக்கை இங்கிருந்துதான் தொடங்குகிறது. தங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, வாக்களிக்கப்பட்ட நாட்டைநோக்கி வழிநடத்திய கடவுளின்மேல் நம்பிக்கையை உருவாக்கி, அவரை வழிபடுவதற்கான வழிமுறைகளை வகுத்துத் தந்தவர் மோசேதான். எனவே இஸ்ரயேல் மக்களை ஒரு மக்களினமாகமட்டுமல்ல, ஒரே கடவுளின் பிள்ளைகளாக, ஒரு மதத்தினராக ஒன்றிணைப்பவரும் மோசேதான். எனவே அவரை யாவே மதத்தின் தந்தை என்றும் அழைக்கலாம்.

விடுதலைப் பயணம் நூலின் சிறப்புகளையும் இங்கே கூறுவது நல்லது. புதிய ஏற்பாட்டில் நற்செய்தி நூல்கள் எந்த வகையான சிறப்பை பெற்றவையாக உள்ளனவோ அதைப்போல பழைய ஏற்பாட்டில் விடுதலைப் பயணம் நூலும் சிறப்பைப் பெற்றதாக உள்ளது. ஏனெனில் இந்நூல் நற்செய்தியை உள்ளடக்கியதாக உள்ளது (காண் விப 3:13, 16). இந்நூல் கடவுளின் தலையீட்டால் உருவான நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது (14:30-31). கடவுள் தன்னிலே நம்பிக்கை கொண்டவர்களை ஏற்றுக் கொண்டு அவர்ளோடு ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார் (19:4-6). இந்த உடன்படிக்கைதான் இஸ்ரயேல் மக்களின் வாழ்வுக்கு அடிப்படையாக அமைந்தது. இந்த உண்மையை இஸ்ரயேல் மக்கள் எப்போதும் எடுத்துக்கூறத் தயங்கவில்லை (காண் திபா 114:6-7, 95). விடுதலைப் பயணம் ஒரு கடவுள் அனுபவம் (ஏரேமி 2:2). இஸ்ரயேல் மக்கள் வரலாற்றில் தன்னை வெளிப்படுத்திய கடவுளைக் கண்டு அனுபவித்தார்கள். விடுதலைப் பயணத்தின் போது அவர்கள் கடவுளின் உண்மையான இயல்பைக் கண்டுகொள்ளப் படித்தார்கள். கடவுளை அனுபவித்து அவரிலே நம்பிக்கை வைத்தார்கள்.

இஸ்ரயேல் மக்களின் விடுதலைப் பயணமும் அவர்களை வழிநடத்திய மோசேயும் மனித குலத்திற்கு சொந்தமான கலாச்சார கருவூலங்கள். இவைகள் மக்களின் விடுதலை தாகத்திற்கு வழிவகுத்ததோடு தொடர்ந்து மக்களைத் தூண்டியெழுப்பி விடுதலைக்காய் குரல் கொடுக்க ஊக்குவிக்கின்றன. விடுதலைப் பயணம் இன்னும் பல உண்மைகளைக் கற்றுத்தருகிறது. முதலாவதாக கடவுளிடம் நம்பிக்கை வைத்துச் செயல்படுவது எளிதான ஒன்றல்ல என்பதைக் காட்டுகிறது. கடவுள் மோசேயைஅழைத்துஅனுப்ப விழைந்தபோது மக்கள் தன்னை நம்புவாகளா? ஏற்றுக் கொள்வார்களா? என்ற சந்தேகம் அவரில் எழுகிறது (4:1, 6:9-12). இஸ்ரயேல் மக்கள் பலநேரங்களில் ஒரு பாதுகாப்பற்ற தன்மையை, நம்பிக்கையின்மையை உணர்வதைப் பார்க்கிறோம் (17:7, 33:18-23). துன்பங்களைத் துணையாகக் கொண்டு செய்யும் இந்த விடுதலைப் பயணம் பயனளிக்குமா? இஸ்ரயேல் மக்களில் பலரும் வாக்களிப்பட்ட நாட்டை அடைவதுவரை இதை ஒரு பயனுள்ள பயணமாகக் கருதவில்லை என்பதுதான் உண்மை.

பயணம் தொடரும்...

God said to moses, “I AM WHO I AM.
This is what you are to say to the Israelites.
I AM has sent me to you.”
- God, Exodus 3:14





# ஞாயிறு மறையுரை

## பொதுக்காலம் 21-ம் ஞாயிறு

21-08-2022

முதல் வாசகம் – எசாயா 66:18-21
இரண்டாம் வாசகம் – எபிரேயர் 12:5-7, 11-13
நற்செய்தி வாசகம் – லூக்கா 13:22-30


மறையுரை வழங்குபவர்

அருட்பணி. S. லூயிஸ் பிரிட்டோ
இயக்குனர்
கலைக் காவிரி, நுண்கலைக் கல்லூரி
திருச்சி




இயேசுவில் அன்பானவர்களே இன்று நாம் பொதுக் காலத்தின் 21 ஆம் ஞாயிற்றுக்கிழமையை சிறப்பிக்கின்றோம்.

**மையச் செய்தி :**

தீமை செய்கின்ற எவருக்கும் இறை ஆட்சியில் இடமில்லை. நன்மை செய்பவருக்கே இறையாட்சியில் இடம் உண்டு.

இயேசுவின் அந்த மூன்று வாக்கியங்கள்

1. நீங்கள் எங்கிருந்து வந்தவர்கள் என எனக்குத் தெரியாது. 2. நீங்கள் எவ்விடத்தாரோ எனக்குத் தெரியாது. 3. தீங்கு செய்பவரே அனைவரும் என்னை விட்டு அகன்று போங்கள்.

நம் எல்லோருக்கும் நன்றாக தெரியும் இயேசு இந்த மூன்று வாக்கியங்களை கூறியது பரிசேயர்களை குறித்து தான் என்று. அவர்கள் கடவுளோடு தாங்கள் இருப்பதாக நினைத்துக் கொண்டு நன்மையை விடுத்து தீமையை செய்து வந்தார்கள். தங்களை எப்போதுமே முன்னிலைப்படுத்திக் கொண்டார்கள். அதனால் தான் அவர்கள் உணரு மாறு இயேசு இந்த மூன்று வாக்கியங்களைக் கூறுகிறார். நிச்சயமாக இந்த வாக்கியங்களைக் கேட்டு அவர்கள் மிகுந்த கோபம் அடைந்து இருப்பார்கள். ஏனென்றால்இ எல்லாவற்றிலும் தங்களுக்குத்தான் முதலிடம் இறையாட்சியிலும் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இறையாட்சியிலே அவர்களுக்கு இடம் இல்லை என்று ஆணித்தரமாக இயேசு கூறியிருக்கிறார். பிரியமானவர்களேஇ இவற்றை இயேசு பரிசேயர்களுக்கு மட்டும் கூறவில்லை மாறாக யார் யாரெல்லாம் மக்களை சுரண்டி ஏமாற்றி தீமை செய்து வாழ்கின்றார்களோ அவர்கள் அத்தனை பேருக்கும் இந்த வாக்கியங்கள் பொருந்தும். பிற இனத்தாரை சராசரி மனிதனாக கூட கருதாது அவர்களை தாழ்வாகவும் அவர்களுக்குக் கடவுள் அரசில் இடம் இருக்காது என்றும் எண்ணி வந்த பரிசேயருக்கு இயேசு கொடுத்த துணிச்சலான பதில்.

**திருக்குறள்**

அருள் இல்லார்க்கு அவ்வுலகு இல்லை, பொருள் இல்லார்க்கு இல்லாகி யாங்கு.

**நடந்த நிகழ்வு**

1965 ஆம் ஆண்டு டெல்லி செயின்ட் சேவியர்ஸ் உயர்நிலைப் பள்ளியிலே அருட்தந்தை.தாமஸ் குன்னங்கள் சே.ச, அவர்கள் பள்ளித் தாளாளராக தலைமை ஆசிரியராக பொறுப்பேற்றார். பெரிய பெரிய அரசியல்வாதிகளின் குழந்தைகளும் பணக்காரர்களின் குழந்தைகளும் தொழில் அதிபர்களின் குழந்தைகளும் படித்து வந்த அந்த பள்ளியிலே மதியம் 3 மணிக்கு மேல் அந்தப் பகுதிக்கு அருகாமையில் உள்ள சேரி ஒன்றிலிருந்து ஏழைக் குழந்தைகளுக்கும் கல்வி கொடுக்க வேண்டும் என்று நினைத்து மாலை 3 மணியிலிருந்து இரவு 6 மணி வரை அவர்களுக்கு அதே பள்ளியிலே கல்வியை வழங்கினார். இதைக் கண்ட அரசியல்வாதிகளும் பணக்காரர்களும் தொழிலதிபர்களும் தங்கள் பிள்ளைகளை அந்த பள்ளியில் இருந்து வெளியே எடுத்தார்கள். ஏழை குழந்தைகளோடு தங்கள் பிள்ளைகள் படிப்பதை அவர்கள் விரும்பவில்லை. ஆனாலும் அருட்தந்தை தாமஸ் குன்னங்கள் தொடர்ந்து துணிச்சலோடு அந்த செயலைச் செய்தார்.

பிறகு அதற்காக 1974 ஆம் ஆண்டு அன்றைய பாரத பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் கையால் பத்மஸ்ரீ என்ற விருதைப் பெற்றார். இறையாட்சியை நன்கு புரிந்தவர்கள் இந்த அருட்தந்தையைப் போல சமுதாயத்திலே பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நிச்சயமாக குரல் கொடுப்பார்கள். முதலானோர் கடைசியாவர். கடைசியானோர் முதலாவர்.

– ஆமென்



# பொதுக்காலத்தின் 21-ம் ஞாயிறு

எசா. 66:18-21, எபி. 12:5-7, 11-13. லூக். 3:22-30

**21-08-2022**




**பா. சேவியர்**
பட்டாபிராம், சென்னை.


## திருப்பலி முன்னுரை

தளர்ந்துபோன மனம் திடம் பெறவும், தள்ளாடும் எண்ணங்கள் உறுதி பெறவும், இறையாட்சிக்கு உட்பட்டு நேர்மையாக வாழவும் வரம் வேண்டி வருகைதந்துள்ள அன்பு இறை மக்களே, உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் 21-ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இன்றைய வழிபாடு இடுக்கமான வழியே இறைவழி என்ற கருத்தை மையமாகக் கொண்டுள்ளது.

எத்தனை இடர் வரினும் எத்தகைய துன்பம் வரினும் விசுவாசத்தில் தளர்வு ஏற்படாமல், கிறிஸ்துவின் அன்பு கட்டளைகளை நிறைவேற்றி இறை வார்த்தைக்கு சான்று பகர்கின்ற வாழ்வு வாழ நாம் அழைக்கப்படுகின்றோம்.

வாழ்வுக்கு இட்டுச் செல்லும் வழி குறுகலானது, சிக்கலானது, துன்பமானது. இதில் நடந்து செல்ல நம்பிக்கையும் துணிவும், அனைவரும் இன்புற்று வாழ வேண்டும் என்ற எண்ணமும் வேண்டும் என்ற கருத்தினை நம் சிந்தையில் விதைக்கிறது இன்றைய வழிபாடு.

கிறிஸ்துவுக்காக தன்னையே இழக்கும் எவரும், அவருடைய மதிப்பீடுகளை ஏற்கும் எவரும் கடைசியானவராக இருந்தாலும் முதன்மையானவராக்கப்படுவர் என்பதை இன்றைய நற்செய்தி தெளிவுபடுத்துகிறது.

நாம் கடவுள் மீது நம்பிக்கை கொண்டு அவருடைய மதிப்பீடுகளைப் பின்பற்றி வாழும்போது, நுழைவாயில் எத்தனை இடுக்கமாக இருந்தாலும் நாம் எளிதாக நுழைந்துவிடலாம். வாழ்வின் உயிர் நாடியான நம்பிக்கை நம் வாழ்வில் இருந்தால் எத்தகைய துன்பத்தையும் எளிதாக எதிர்கொண்டு விடலாம்.

நமது வாழ்வில் வரக்கூடிய துன்பங்கள் நம்மை மேலான வாழ்வுக்கு உயர்த்தக் கொடுக்கப்படுபவையே ஒழிய நம்மை வீழ்த்துவதற்காகத் தரப்படுபவை அல்ல என்பதை உணந்தவர்களாய் கடவுள் மீது கொண்ட நம்பிக்கையால் உறுதியாக இருந்து, இடுக்கமான வாயில் வழியாக இறையாட்சிக்குள் நுழைய இத்திருப்பலி வழியாக இறைவனை வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை

கடவுளின் இரக்கமும், அவர் தரும் மீட்பும் அனைவருக்கும் உரியது என்ற நற்செய்தியை பறைசாற்றுகிறது இன்றைய முதல் வாசகம். கடவுள் இஸ்ரயேல் மக்களுக்கு அளித்திருந்த வாக்குறுதியை மற்ற இனத்தாரையும், வேற்று மொழி பேசுவோரையும் கொண்டு நிறைவேற்றுவார் என்பதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

நமது வாழ்வில் துன்பங்களும், துயரங்களும் குறுக்கிடும்போது இயேசுவின் பாடுகளும் துன்பங்களும் நமக்கு உறுதுணையாய் இருக்க வேண்டும் என்பதை எடுத்துரைக்கிறது இன்றைய இரண்டாம் வாசகம். வாழ்க்கையில் உண்டாகும் துன்பங்கள் மூலம் நாம் நற்பயிற்சி பெற வேண்டிய தேவையை உணர்த்தும் திருத்தூதர் பவுலின் அறிவுரையை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) வழியும் உண்மையும் வாழ்வுமான அன்பு இறைவா, உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்ற உம்மால் நியமிக்கப்பட்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட் பணியாளர்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதியும். அவர்களுக்கு சவால்களையும் துன்பங்களையும் திடமுடன் எதிர்கொள்ளும் மனதிடத்தையும், ஆன்ம பலத்தையும், உடல் நலத்தையும் நிறைவாக தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) வாழ்வு தரும் வல்ல தேவனே துன்பங்கள் எங்களைத் தொடரும் போதும், துயரங்கள் எங்களை சூழும் போதும், கவலைகளும் நோய்களும் எங்களைத் தாக்கிக் கண்ணீர் கனவாயில் ஆழ்த்தும்போதும், யாரிடம் செல்வோம் இறைவா வாழ்வு தரும் வார்த்தை உம்மிடம்தானே உள்ளது என்ற நம்பிக்கையுடன் உமது கரத்தை இறுகப்பற்றி உம்மை விட்டு விலகாது வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) நிலை வாழ்வை அளிக்கும் வார்த்தைகளை வழங்கும் தந்தையே இறைவா, திருமணமான பெண்களும், ஆண்களும் ஒருவரையொருவர் புரிந்து, ஒருவருக்கொருவர் அன்பை பகிர்ந்து, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, இயேசுவின் வார்த்தைகளை ஆழமாக உணர்ந்து அதனை வாழ்வாக்கி தனது குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை என்பதை உணர்ந்து வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) நீதியின் நாயகனே எம் இறைவா, துன்பத்தைக் கண்டு துவண்டு போகாத மனநிலையை எங்கள் குழந்தைகளின் உள்ளங்களில் விதைக்கவும், கிறிஸ்து வின்மேல் கொண்ட நம்பிக்கையை தினந்தோறும் குடும்ப செபம் சொல்வதன் வழியாக புதுப்பிக்கவும், நாங்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவை பிரதிபலித்து சாட்சிய வாழ்வு வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## திரு.வி.க.வின் கிறிஸ்துவின் அருள் வேட்டல்

**அன்பே குமரனும் அன்பே அவன்மொழியும்**
**அன்பே அவன்வழியும் அன்று**





இறைமகன் இயேசு அன்பானவர், அவரது வார்த்தைகள் ஒவ்வொன்றும் அன்பானது. அவரது செயலும், அவர் காட்டும் வழியும் அன்பாகும். அதுவே கிறிஸ்தவ நெறியாகும்.



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM



## குறள் - 7

**தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது**

### குறள் விளக்கம்

தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் அல்லாமல் மற்றவர்களுக்கு மனக்கவலையை மாற்ற முடியாது.

### சிந்தனை

வண்டி ஓட அச்சாணி வேண்டும். வண்டி அச்சாணியை சார்ந்தே இயங்குகின்றது. யாராயிருந்தாலும் ஒருவரை மற்றவரைச் சார்ந்து தான் வாழ வேண்டும். உதாரணமாக பிள்ளைகள் பெற்றோரையும், பெற்றோர் பிள்ளைகளையும் சார்ந்தே வாழ்கின்றனர். ஒருவருடைய தயவோ, உதவியோ மற்றவருக்கு அவசியம் தேவை.

கடவுளுக்கு ஒப்பாரும் இல்லை நிக்காரும் இல்லை. அதாவது அவருக்கு சமமானவரும் அவரைவிட உயர்ந்தவரும் இல்லை. மனிதரை சார்ந்து வாழ்வதைவிட உயர்வான கடவுளை சார்ந்து வாழ்வது சாலச் சிறந்தது.

மூன்று நாடுகளுக்கு இடையே பெரும் பகை. கடவுள் அந்த மூன்று நாடுகளின் பிரதிநிதிகளையும் அழைத்து பேசினார். உங்கள் பிரச்சனை என்ன என்றார்? முதல் நாட்டு பிரதிநிதி இரண்டாம் நாட்டு பிரதிநிதியை சுட்டிக் காட்டி இவருடைய நாட்டை முழுமையாக அழித்துவிடுங்கள் என் பிரச்சனை தீர்ந்துவிடும் என்றார். இரண்டாம் நாட்டு பிரதிநிதி கடவுளிடம், முதல் நாட்டின் வரைபடம் உலக வரைபடத்தில்; இல்லாமல் செய்துவிடுங்கள் என்றார். மூன்றாம் நாட்டு பிரதிநிதியோ முதல் இருவரின் வேண்டுதல்களை நிறைவேற்றும் என் ஆசை தானாக நிறைவேறிவிடும் என்றார். இதைக் கேட்ட கடவுள் அதிர்ச்சியில் அப்படியே உறைந்து போனார்.

ஒருவர் மற்றவரை சார்ந்து தான் வாழ வேண்டும். ஒரு தெருவில் ஒரு குடும்பம் மற்றொரு குடும்பத்துடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ சார்ந்துதான் வாழ வேண்டும். ஒரு மாநிலம் பக்கத்து மாநிலத்துடன் தொடர்பில் இருந்துதான் ஆகவேண்டும். அதுபோல் ஒரு நாடும் அண்டை நாடுகளுடன் சார்புடன் வாழ வேண்டும். ஒருவரை அழித்து மற்றவர் நன்றாக வாழ முடியாது.

மனித சார்பு வாழ்க்கையே இவ்வளவு நன்மைகளை ஏற்படுத்தும் போது கடவுளை சார்ந்து வாழும் வாழ்வு அதிக நற்பயன்களை விளைவிக்க வல்லது. உயர்நெறியாம் இறைவனுடன் இணைந்து வாழும்போது மனக்கவலைகள் அற்று நல்வாழ்வு வாழமுடியும்.

பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்-மத் 11:28.

என்று அழைக்கிறார் இருக்கின்றவராய் இருக்கின்றவர் நானே என்ற நம் கடவுள். நானே இருக்கின்றவர் என்று முக்காலத்திற்கும் நம்மோடு வாழ்ந்து வருகின்றார். அவரோடு இணைந்து வாழ்ந்தால் மனக்கவலைகள் நீங்கும்.

நம் கவலைகளையும் சுமைகளையும் ஆண்டவரிடம் இறக்கி வைப்போம்: நிம்மதியாய் வாழ்வோம்.



# வத்திக்கான் செய்திகள்

1939ம் வருடம் தந்தை ஹென்றி காஃபாரல் அவர்களால் இளைஞர்களுக்காக உருவாக்கிய அன்னையின் குழுக்கள் என்ற அமைப்பை வத்திக்கான் 1992ம் ஆண்டு அதை அங்கீகரித்தது. அதன் அமைப்பைச் சார்ந்த இளைஞர் குழு ஒன்று நமது பாப்பரசரை கடந்த 2022, ஆகஸ்டு 6ம தேதி சந்தித்தது. அச்சமயம், இன்றைய இளைஞர்கள் இயேசு கிறிஸ்துவை தங்கள் ஒப்பற்ற நண்பனாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்றும் தினமும் நம் அன்னை மரியாளுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள், அவர் உங்களை நல்லவராக வளர உதவி செய்வார். தூய ஆவியார் கொடுத்துள்ள நற்கொடைகளை மனித முன்னேற்றத்திற்கும், நல்லிணக்கத்திற்கும் பயன்படுத்துங்கள். எப்போதும் எல்லோருக்கும் உதவும் நல்ல இதயமுடையோராக வாழ வைப்பார் என்று அறிவுரை கூறினார்.

1917 முதல் 1953க்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் அருட்தந்தை.பேத்ரோ ஓரோஸ். அவர் கிழக்கு ஐரோப்ப கிரேக்கப் பகுதியில் வாழ்தவர். அன்று ரஷ்யாவின் ஆளுகைக்குட்பட்ட உக்ரேனில் அவர் மறைமுகமாக மதப் பணிகளைச் செய்த குற்றத்திற்காக அரசாங்கத்தால் அன்று படுகொலை செய்யப்பட்டார். அவரின் மறைசாட்சியத்தை நம் திருத்தந்தை அங்கீகரித்துள்ளார்.

கேரளாவில் கிழக்கத்ய ரீதி சீரோ மலபார் திருச்சபையில் சமீப காலமாக, திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களைக் குறித்து இருவகையான கருத்து வேறுபாடுகள் அதிகரித்து பல போராட்டங்களுக்கு வழி வகுத்துள்ளது.

குருக்கள் மக்களைப் பார்த்து திருப்பலி நிறைவேற்றுவதையே தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்று ஏராளமான குருக்களும், பொதுநிலையினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

சமீபத்தில் திருஅவையின் உயர்மட்ட சினாடு, திருப்பலியில் குருக்கள், நற்கருணை சமயத்தில், பீடத்தை நோக்கித் திரும்பி நின்று பலி ஒப்புக்கொடுக்கலாம் என்ற ஒரு வழிமுறையைக் கூறியுள்ளது. அதற்கு மிக கடுமையான எதிர்ப்பு கிளம்பியுள்ளது. எர்ணாகுளம் அங்கமாலி மறைமாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 360 பங்குகளிலிருந்து சமார் 40000 கத்தோலிக்கர்கள் கொச்சியில் உள்ள பெரிய ஸ்டேடியத்தில் கூடி, திருப்பலியில் நற்கருணை வழிபாட்டுச் சமயத்தில் குருக்கள் பீடத்தை நோக்கி இருக்க வேண்டும் என்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

பாகிஸ்தான் பலுசிஸ்தான் பகுதியில் சமீபத்தில் பெய்த கடும் மழையால் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கிறிஸ்தவ ஆலயங்கள், கிறிஸ்தவ நிறுவனங்கள் அனைத்தும் பெருத்த சேதமடைந்துள்ளன. மக்களின் வாழ்வாதாரங்கள் இன்றி பெரிதும் துன்பப்படுகின்றார்கள்.



# இந்த வார திருப்பலி வாசகக் குறிப்புகள்

## பொதுக்காலம் 21-ம் ஞாயிறு - 21.08.22

### 21.08.2022 – ஞாயிற்றுக்கிழமை
முதல் வாசகம் : எசாயா 66:18-21
இரண்டாம் வாசகம் : எபிரேயர் 12:5-7, 11-13
நற்செய்தி : லூக்கா : லூக்கா 13:22-30

### 22.08.2022 – புதன்கிழமை
முதல் வாசகம் : 2 தெசலோனிக்கர 1:1-5, 11-12
நற்செய்தி : மத்தேயு 23:13-22

### 23.08.2022 – செவ்வாய்கிழமை
முதல் வாசகம் : 2 தெசலோனிக்கர் 2:1-3, 14-17
நற்செய்தி : மத்தேயு 23:23-26

### 24.08.2022 – புதன்கிழமை
முதல் வாசகம் : திருவெளிப்பாடு 21:9-14
நற்செய்தி : யோவான் 1:45-51

### 25.08.2022 – வியாழக்கிழமை
முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 1:1-9
நற்செய்தி : மத்தேயு 24:42-51

### 26.08.2022 – வெள்ளிக்கிழமை
முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 1:17-25
நற்செய்தி : மத்தேயு 25:1-13

### 27.08.2022 – சனிக்கிழமை
முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 1:26-31
நற்செய்தி : மத்தேயு 25:14-36




Let us remember that love lives through sacrifice and is nourished by giving. Without **SACRIFICE** That is no **LOVE**


St. Maximilian Kolbe



# திருவிவிலியமும் திருக்குறளும்

## வழங்கும்

# ஆன்மீகச் சிந்தனை




**அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறன்இயலாள்
பெண்மை நயவா தவன்.**

**அதிகாரம் 15**

**பிறனில் விழையாமை**

**குறள் - 147**

**பொருள்:** அறத்தின் இயல்போடு பொருந்தி இல்வாழ்க்கை வாழ்பவன், பிறனுக்கு உரிமையாளரின் பெண்மையை விரும்பாதவன் என்கிறார் வள்ளுவர்நேர்மை, தூய்மை, உண்மை, வாய்மை, மெய்ம்மை, சான்றாண்மை முதலான அனைத்துப் பண்புகளும் அறம் எனப்படும். அறம் என்பதன் பொருள் அற்றது என்பதாகும். உள்ளம் மாசற்றதாக இருத்தல், தன்னலம் அற்றதாக இருத்தல், பற்றற்றதாக இருத்தல் இவை அனைத்தும் அறத்துள் அடங்கும். இதில் அன்பும், அருளும் அடங்கும். தூய்மையான செயல் வேண்டும் என்றால் துணையாக நிற்பவை தூய்மையான மனமும், தூய்மையான சொல்லும் ஆகும்.

சான்றோர்கள் உண்மையை வணங்கி அதன் ஒளிச்சுடரினைப் பின்பற்றியவர்கள். வாய்மையின் ஆற்றல் இறையாற்றல் என உணர்ந்தவர்கள். உலகங்கள் அனைத்திலும் அறிவாய், அனுபவங்களாய், உள்ளுணர்வுகளாய் எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்கும் மெய்ம்மையே இறை எனக் கண்டவர்கள். உலக வாய்மையை உணர்ந்தவர்கள். அவர்கள் உணர்வு உடையவர்களாய் மகான்களாக, மகாத்மாக்களாக உயர்கின்றனர்.

பொய்மை நீங்கிய உள்ளதுச் சான்றோர்களை உலக மக்கள் தங்கள் உள்ளங்களை எல்லாம் காணிக்கை ஆக்கி போற்றி பாராட்டுவார்கள் மட்டுமல்லாமல் என்றும் தம் உள்ளங்களில் நிலைநிறுத்திப் புகழ்வார்கள்.

அறத்திற்கு இணையானது அறமே. ஆகையால் அறத்தை மேற்கொள்வதே பாதுகாப்பானது.

இயன்ற வழியெல்லாம் அறச் செயல் செய்து வரவேண்டும். ஆரவாரம் ஒழிந்து, தூய்மை மிகுந்து உள்ளத்தில் ஒளி மிகுந்து வாழ்வில் இன்பமும் நிறைவும் மிகுதல் வேண்டும்.

உலகில் மக்கள் மதுவால், கள்ளால், காமத்தால், சூதால், ஆபாச திரைப்படங்களால் இன்பம் பெறுவதாக மயங்கி திரிகின்றனர் இவை அனைத்தும் நிலையில்லாத சிறுமை இன்பங்கள். இறுதியில் துன்பத்தில் ஆழ்த்தி மனிதனை அழித்து விடும் ஆகா இன்பங்கள்.

அறத்தால் வரும் இன்பம் தான் நிலையானது; செய்யத்தக்கது. தீது விரைந்து வளர்ந்தாலும் வளர்ந்த விரைவுக்கு ஏற்ப விரைந்து அழிந்து மறைந்துவிடும் என்பது உலக நியதி. ஆதலால் மக்கள் ஆரவாரங்களுக்கும், மயக்க உணர்வுகளுக்கும் ஆட்படாமல் துணிவோடும், நம்பிக்கையோடும் அறநெறி போற்றி வாழ வேண்டும்.

அறத்தை அணிந்தேன்; அது என் ஆடையாயிற்று. நீதி எனக்கு மேலாடையும் பாகையும் ஆயிற்று. (யோபு 29:14)

ஆண்டவருக்கு அஞ்சி அறத்தோடு வாழ்பவர்களின் வீட்டில் இறை சமாதானம் நிலைத்திருக்கும் என நமது விவிலியத்தில் வாசிக்கிறோம். ஆண்டவருக்கு அஞ்சி நடப்போரின் உறைவிடங்களில் அவரது ஆசி தங்கும். (நீதிமொழிகள் 3:33). அறவழியில் நடந்து புனித குடும்பங்களை உருவாக்கிய புனிதர்கள் உலக மக்கள் அனைவருக்கும் எடுத்துக்காட்டாக இருக்கின்றனர்.

1. அன்னாள் சுவக்கீன். இவர்கள் அன்னை மரியாவின் பெற்றோர்கள்.

2. அன்னை மரியாள்- சூசையப்பர்

3. எலிசபெத்-சக்கரியாஸ்.

இவர்கள் விவிலியத்தில் எழுதப்பட்ட அறத்தில் சிறந்த தம்பதியினர் என்பதனை நாம் அறிவோம். எந்தக் கடினமான சூழ்நிலையிலும் ஒருவரை ஒருவர் விட்டு பிரியாமல் வாழ்ந்த ஆன்மீகத்தில் சிறந்த பெற்றோர்கள்.

கடவுளின் வார்த்தைகள் ஒவ்வொருவரையும் சீர்படுத்தும்; நெறிப்படுத்தும். அதைக் கற்று மனதில் பதிய வைத்து வாழ்வில் செயல்படுத்த வேண்டும். அப்போது வழி விலகாமல் அறத்தில் நின்று, பிறன்மனை நோக்காமல் வாழமுடியும்.

அதற்கான இறைவசனங்கள்:

1. உன்னைப் படைத்தவரை உன் இளமைப் பருவத்தில் மறவாதே. ( சபை உரையாளர் 12 :1).

இளைஞர் தம் நடத்தையை மாசற்றதாய்க் காத்துக் கொள்வது எவ்வாறு? உம் வாக்கைக் கடைப்பிடிப்பதால் அன்றோ?

முழுமனத்தோடு நான் உம்மைத் தேடுகின்றேன்; உம் கட்டளைகளைவிட்டு என்னை விலகவிடாதேயும்.

உமக்கெதிராய் நான் பாவம் செய்யாதவாறு உமது வாக்கை என் இதயத்தில் இருத்தியுள்ளேன்.

ஆண்டவரே, நீர் போற்றுதற்கு உரியவர்; எனக்கு உம் விதிமுறைகளைக் கற்பித்தருளும்.

உம் வாயினின்று வரும் நீதித்தீர்ப்புகளை எல்லாம் என் இதழால் எடுத்துரைக்கின்றேன். பெருஞ்செல்வத்தில் மகிழ்ச்சி அடைவதுபோல், நான் உம் ஒழுங்குமுறைகளின்படி நடப்பதில் மகிழ்ச்சியுறுகின்றேன்.

உம் நியமங்களைக் குறித்து நான் சிந்திப்பேன்; உம் நெறிகளில் என் சிந்தையைச் செலுத்துவேன்;

உம் விதிமுறைகளில் நான் மகிழ்ச்சியுறுகின்றேன்; உம் வாக்குகளை நான் மறக்கமாட்டேன்.

உம் அடியானுக்கு நன்மை செய்யும்; அப்பொழுது, நான் உம் சொற்களைக் கடைப்பிடித்து வாழ்வேன். (திருப்பாடல்கள் 119:9-17)

இளைஞரே, நீங்கள் வலிமை வாய்ந்தவர்கள்; கடவுளின் வார்த்தை உங்களுள் நிலைத்திருக்கிறது. தீயோனை நீங்கள் வென்று உள்ளீர்கள். (1யோவான்:2:14).

4. பேச்சு, நடத்தை, அன்பு, நம்பிக்கை, தூய்மை ஆகியவற்றில் நீ விசுவாசிகளுக்கு முன்மாதிரியாய் விளங்கு. (1தீமொத்தேயு 4:12)

5. நீ இளவயதில் இச்சைகளை விட்டு ஓடிவிடு. தூய்மையான உள்ளத்தோடு ஆண்டவரது பெயரை அறிக்கையிட்டு வழிபடுவோருடன் நீதி, நம்பிக்கை, அன்பு, அமைதி ஆகியவற்றை நாடி தேடு. மடத்தனமான அறிவற்ற விவாதங்கள் சண்டைகளை தோற்றுவிக்கும் என அறிந்து அவற்றை விட்டு விடு. (2 தீமொத்தேயு 2:22).

இவ்வசனங்களை மனனம் செய்து வாழ்வாக்கினால், கண்ணால் காண்கின்ற உலகம் நமது இல்லை; காணாத பரலோகமே நிச்சயம் என்பதை அறிந்து நேர்வழியில் நடப்போம்.

*இயேசுவுக்கே புகழ்*

**- லீமா விக்டோரியா**

# திருவிவிலியத்தோடு திருக்குறளும் படிப்போம்